# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

**2402/19 - 2024 සැප්තැම්බර් මස 20 වැනි සිකුරාදා - 2024.09.20**

*2402/19 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**ஹொரண நகர சபை அதிகார வரம்பு மற்றும் ஹொரண பிரதேசசபை அதிகார வரம்புக்கான அபிவிருத்தித் திட்டத்திற்கு அங்கீகாரம்**

*நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஆகிய எனக்கு 1982 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை (திருத்தப்பட்ட) சட்டத்தின் 8 F, பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கு அமைய, 2024 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 29 ஆந் திகதி நகர அபிவிருத்தி அதிகாரசபையின் முகாமைத்துவ சபையினது பரிந்துரைகளை பரிசீலித்த பின்னர், ஹொரண நகர சபை அதிகார வரம்பு மற்றும் ஹொரண பிரதேச சபை அதிகார வரம்புக்கான அபிவிருத்தித் திட்டத்தின் அனுமதியினை இத்தால் அங்கீகரிக்கின்றேன்.*

**பிரசன்ன ரணதுங்க (பா. உ),**
*நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்.*

*நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு,*
*12 வது மாடி,*
*"செத்சிறிபாய" கட்டம் - II,*
*பத்தரமுல்லை,*
*2024, செத்தெம்பர் 18.*

1A - PG 6878 — 10 (2024/09)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**ஹொரணை நகர சபை அதிகார பிரதேசம் மற்றும் ஹொரணை பிரதேச சபை அதிகார எல்லைக்குட்பட்ட பிரதேசத்தின் அபிவிருத்தித் திட்டத்திற்கான அனுமதி தொடர்பான அறிவித்தல்**

*1982 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை (திருத்தப்பட்ட) சட்டத்தின் திருத்தப்பட்ட 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தின் 8 (A) பிரிவிற்கு அமைய ஒழுங்குசெய்யப்பட்ட, ஹொரணை நகர சபை அதிகார பிரதேசம் மற்றும் ஹொரணை பிரதேச சபை அதிகார எல்லைக்குட்பட்ட பிரதேசத்தின் அபிவிருத்தித் திட்டம் 2024 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 18 ஆந் திகதி, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஆகிய நான் குறித்த 1982 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை (திருத்தப்பட்ட) சட்டத்தின் பிரிவு 8F இன் கீழ் எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரத்திற்கு அமைய, அனுமதி வழங்கினேன் என்பதை, குறிப்பிட்ட சட்டத்தின் 8 (G) பிரிவின் பிரகாரம், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மக்களுக்கு இத்தால் அறிவிக்கின்றேன்.*

**பிரசன்ன ரணதுங்க (பா. உ),**
*நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்.*

*நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு,*
*12 வது மாடி,*
*"செத்சிறிபாய" கட்டம் - II,*
*பத்தரமுல்லை,*
*2024, செத்தெம்பர் 19.*

**ஹொரணை நகர சபை அதிகார பிரதேசம் மற்றும் பிரதேச சபை அதிகார பிரதேசத்தின் அபிவிருத்தித் திட்டத்திற்கான அனுமதி**

*1982 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க சட்டத்தின் திருத்தப்பட்ட 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தின் 8 (A) பிரிவின் அதிகாரங்களுக்கு இணங்க ஹொரணை நகர சபை அதிகார பிரதேசம் மற்றும் பிரதேச சபை அதிகார பிரதேசத்தின் அபிவிருத்தி திட்டத்திற்கு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அசைச்சர் கௌரவ பிரசன்ன ரணதுங்க அவர்களினால் குறித்த சட்டத்தின் 8 (F) பிரிவிலிருந்து அவருக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு இணங்க 2024 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 18 ஆந் திகதி அனுமதிக்கப்பட்டது என பொதுமக்களுக்கு இத்தால் அறிவிக்கின்றேன்.*

**நிமேஸ் ஹேரத்,**
*தலைவர்,*
*நகர அபிவிருத்தி அதிகார சபை.*

*2024, செத்தெம்பர் 19.*

EOG 09 - 0135

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.